
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1314

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

73

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

*1976-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் தேதி, ஒன்றிய அரசின் கேபினெட் செக்ரட்டரியேட்டின் (Cabinet Secretariat) டிபார்ட்மென்ட் ஆஃப் பர்சனல் அண்ட் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபாஃர்ம்ஸ் (Department of Personnel and Administrative Reforms) வெளியிட்ட கெஜட் நோட்டிஃபிகேஷன் எண் எஸ்.ஓ. 74 (இ)-ன் (Gazette Notification No. S.O. 74(E)) மூலம் நீதிபதி ராகுல் சிங் சர்க்காரியா தலைமையிலான விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சிக்காலம் தொடர்பாக, முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் அதன் விசாரணைக்கு அனுப்பப்பட்டன.*

*'மிசா' நெருக்கடிச் சட்டத்தின் கீழ், கழக ஆட்சி கலைக்கப்பட்ட அடுத்த இரண்டு நாட்களில் அமைக்கப்பட்ட அந்த ஆணையம், கழக ஆட்சியின்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளைக் குறிப்பாக, அ.தி.மு.க. நிறுவனர், எம்.ஜி.ஆர். அளித்த எழுத்துபூர்வமான ஊழல் புகார்களின் அடிப்படையில், கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு (1971-1976) மீது, சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிப்பதே, இந்த கமிஷனின் முக்கிய நோக்கமாகும்.*

*இந்த கமிஷன், விசாரணையைத் தொடங்குவதற்கு முன், கமிஷன் அமைக்கப்பட்டதற்கான பூர்வாங்க விவரங்களைப் பதிவுசெய்கிறது, சர்க்காரியா ஆணையத்தின் முதல் அறிக்கை (Sarkaria Commission Preliminary Report). அந்தத் தகவல்கள் பின்னோக்கி, 1972-ஆம் ஆண்டுக்குச் செல்கின்றன. ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளும், அதற்கு கலைஞர் கொடுத்த எதிர்வினைகளும் பதில்களும் எப்படி அமைந்தன என்பதற்கு, இன்றும் ஆதாரமாக இருக்கிறது அந்த அறிக்கை.*

*1972-ஆம் ஆண்டு நவம்பர் 4. அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் மீதும், முழு அமைச்சரவையையும் கழக மாவட்டச் செயலாளர்களையும், சில அரசு அதிகாரிகளையும் விசாரிக்க வேண்டும் என்று கோரி, எம்.ஜி.ராமச்சந்திரன் குடியரசுத் தலைவரிடம் மனு அளித்தார். 1972 -ஆம் ஆண்டு நவம்பர் 15-ஆம் தேதி அன்று, பிரதமர் இந்திரா காந்தி முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து, கலைஞரிடம் விளக்கம் கேட்டார். அதற்கு, 1972-ஆம் ஆண்டு டிசம்பர் 14 அன்று, இரண்டு கடிதங்களை கலைஞர் அனுப்பினார். அவற்றில் ஒன்று, கடிதம்; மற்றொன்று, குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றுக்கும் அவர் அளித்த 'detailed answers to the specific charges' என சர்க்காரியா கமிஷன், தன் அறிக்கையில் குறிப்பிடுகிறது.*

*கலைஞர், ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் விரிவான பதில் அளித்தார். அந்த விளக்கங்களுக்கு, எம்.ஜி.ஆர். 1973-ஆம் ஆண்டு, ஜனவரி 10-ஆம் தேதி அன்று, மறுப்புரை அளித்தார். பிரதமர் அந்த மறுப்புரைகளையும் கலைஞரிடம் அனுப்பி, மீண்டும் விளக்கம் கேட்டார். அதற்கும் கலைஞர் பதிலளித்தார்.*

*1973-ஆம் ஆண்டு மே 28-ஆம் தேதி அன்று, பிரதமருக்கு எழுதிய கடிதத்துடன் கூடுதல் குறிப்பையும் கலைஞர் அனுப்பினார். இந்த முழுக் கடிதப் பரிமாற்றமும் சர்க்காரியா கமிஷன் முதல் அறிக்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதில் இன்னும் முக்கியமான சுவாரஸ்யமான செய்தி ஒன்று இருக்கிறது. எம்.ஜி.ஆரின் மனுக்கள், மறுப்புரைகள், கலைஞரின் பதில்கள், மறுபதில்கள் ஆகிய அனைத்தும் அப்போது கழக அரசால் மூன்று நூல்களாக வெளியிடப்பட்டன. அதையும் சர்க்காரியா கமிஷனின் முதல் அறிக்கை பதிவுசெய்கிறது. அதாவது, சர்க்காரியா கமிஷன் உருவாகும் முன்னரே, இந்த விவகாரம் ஒரு ஆவணப் போராட்டமாக மாறியிருந்தது.*

*நெருக்கடி நிலை காலத்தில், ஒன்றிய அரசுக்கு எதிராக உரிமைப் போரினைத் தனியொரு அரசாக, தமிழ்நாட்டில் நிகழ்த்திக் கொண்டிருந்தார் கலைஞர். 1976-ஆம் ஆண்டு ஜனவரி 31-ஆம் தேதி, ஆட்சி கலைக்கப்படுகிறது. பிப்ரவரி 3-ஆம் தேதி அன்று, ஒன்றிய அரசு, Commissions of Inquiry Act, 1952-ன் கீழ் நீதிபதி சர்க்காரியா தலைமையில், ஒருநபர் கமிஷனை அமைத்தது. அந்த கமிஷனுக்கு புகார்தாரர்கள் குற்றச்சாட்டுகளை அனுப்பினர். மொத்தம் 28 தலைப்புகளில் அவை இருந்தன. அவற்றில் மேகலா பிக்சர்ஸ், அஞ்சுகம் பிக்சர்ஸ், டிராக்டர், கோபாலபுரம் வீடு, அஞ்சுகம் பதிப்பகம்-முரசொலி, திருவாரூர் வீடு, வீராணம் திட்டம், ஏரியல் ஸ்பிரேயிங், நாதன் பப்ளிகேஷன்ஸ், சமயநல்லூர் மின் நிலையம், நியூ குளோப் தியேட்டர், சர்க்கரை விவகாரம், கொடைக்கானல்-பழனி சாலை, தனியார் அறக்கட்டளைகள், தொழிற்சங்கங்கள், பத்திரிகை அச்சுறுத்தல், அரசு இயந்திரத்தைக் கட்சிக்குப் பயன்படுத்தியது, போலீஸ் அத்துமீறல்கள் உள்ளிட்டவை இருந்தன. அவை எவற்றுக்கும் ஆதாரமில்லை. ஆனால், குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன; ஆணையத்தால் ஏற்கப்பட்டன. மற்றொன்று, தி.மு.க. மீது வைக்கப்பட்ட எந்தக் குற்றச்சாட்டிலும் குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கவும் இல்லை.*

*அதேபோல, 'கலைஞர் அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் பொய் என்று ஒரே வார்த்தையில் மறுத்தார்' என்று சொல்வதும் அவரது பதில்களின் தன்மையைச் சுருக்கிவிடும். அதனால்தான், கலைஞரின் அந்தப் பதில்களை வெறும் 'மறுப்பு அறிக்கை' என்று அழைப்பது சரியல்ல. ஒரு முதலமைச்சர், தன் ஆட்சியின் நிர்வாக முடிவுகளை விளக்கிக் கொடுத்த அரசியல் - நிர்வாக ஆவணங்களாக உள்ளன. இந்தப் பின்னணியில்தான் சர்க்காரியா கமிஷன் விசாரணையையும் பார்க்க வேண்டும்.*

*கமிஷன், 1976-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் செயல்படத் தொடங்கியது. விசாரணைக்கு உதவ, சி.பி.ஐ. உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் பயன்படுத்தப்பட்டன. கமிஷன் முன் கலைஞரும் முன்னாள் அமைச்சர்களும் தங்களுடைய வாதங்களை முன்வைத்தனர். விசாரணையின் நடைமுறைகள், சாட்சிகளின் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மை, குற்றச்சாட்டுகளின் வரம்பு போன்றவற்றிலும் கழகத்தின் சார்பில், எதிர்வாதங்கள் வைக்கப்பட்டன.*

*சர்க்காரியா கமிஷன் முதல் அறிக்கையிலேயே இந்த விவரங்கள் அனைத்தும் (preliminary objections, petitions, witnesses, evidence and arguments) ஆகியவை தனித்தனி அத்தியாயங்களாக உள்ளன. அந்த வகையில் பார்த்தால், சர்க்காரியா ஆணையம் விவகாரத்தை ஒரு வரியில் முடித்துவிட முடியாது.*




# மீண்டும் தொடங்குகிறது, துரோக வரலாறு!

*கலைஞர் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அவற்றுக்கு என்ன பதில் சொன்னார்? கமிஷன் என்ன கண்டறிந்தது? அந்தக் கண்டுபிடிப்புகளின்மீது குற்றவியல் வழக்கில் என்ன நடந்தது என விரிவாகப் பேசும்போதுதான் அதன் உண்மையை நோக்கி பயணப்படுவதாக இருக்கும். ஆட்சியில் இருந்த ஒருவரை அரசியல் குற்றச்சாட்டின் அடிப்படையில், குற்றவாளி என்று முன்கூட்டியே தீர்மானிக்க முடியாது; விசாரணை நடந்தால், ஆவணத்துடன் சட்டத்தின் முன்னாலும் உண்மை நிரூபிக்கப்பட வேண்டும் என்பதுதான் அரசியல் அமைப்புச் சட்டத்தின் நடைமுறை. கலைஞர் மீது 1972-இல் தொடங்கிய இத்தகைய அவதூறு பிரச்சாரம், 1981-இல் இந்த வழக்குகள் உண்மைக்குப் புறம்பானவை எனத் திரும்பப் பெறப்படும் நிலை வரை நீண்டது. இன்றும் நீண்டுகொண்டிருக்கிறது.*

*இன்று, சர்க்காரியா கமிஷன் என்ற பெயரை அரசியல் மேடையில் உச்சரிக்கும் ஒவ்வொருவரிடமும் ஒரு கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. குற்றச்சாட்டை மட்டும் படித்தீர்களா? அதற்கு, கலைஞர் அளித்த பதிலையும் படித்தீர்களா? கமிஷனின் முழு அறிக்கையையும் படித்தீர்களா? அதன் பின்னர் நடந்த நீதிமன்ற நடவடிக்கைகளையும் பார்த்தீர்களா? அதாவது, அந்த வரலாற்றை முழுமையாகப் படித்தீர்களா என்பதுதான். வரலாற்றின் முழு ஆவணங்களும் கண் முன் இருக்கையில், அந்த ஆவணங்கள் எதையும் பார்க்காமல், வெற்று அரசியல் முழக்கங்களுக்காக மட்டும் கலைஞரின் ஆட்சி நிர்வாக நிலைப்பாடுகளை மதிப்பிடுவது, வரலாற்றுக்குச் செய்யும் துரோகம் மட்டுமல்ல; தமிழ்நாட்டின் நலனைப் பின்னுக்குத் தள்ளி, மீண்டும் யாருக்கோ துணைபோகும் துரோகச் செயலைத் தொடங்கிவிட்டீர்கள் என்றே பொருள்.*

> **"தமிழ்நாட்டின் நலனைப் பின்னுக்குத் தள்ளி, மீண்டும் யாருக்கோ துணைபோகும் துரோகச் செயலைத் தொடங்கிவிட்டீர்கள் என்றே பொருள்."**

...தொடரும்

## சதிக்கூட்டத்தின் கூச்சல்!

சட்டமன்றத்தில், காவல் துறை மானியக் கோரிக்கை மீதான கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டிய விஜய், தரமற்ற வகையில் நடந்துகொண்டதைச் சமூக ஆர்வலர்களும் எழுத்தாளர்களும் சமூக வலைதளங்களில் கடுமையாக விமர்சித்துவருகின்றனர்.

சமூக ஆர்வலர் அருண்குமார் என்பவர், "தி.மு.க. கேட்ட கேள்விகள் அனைத்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கேள்விகள். ஆனால், முதல்வர் விஜய் பேசியது எல்லாமே தி.மு.க. மீதான, கலைஞர் மீதான, ஸ்டாலின் மீதான, உதயநிதி மீதான அவதூறுகள் மட்டுமே... இதற்கும் 'ப்ளாஸ்ட்' 'ப்ளாஸ்ட்' என்கின்றனர் தற்குறிகள்" என்று கூறியுள்ளார்.

எழுத்தாளர் நீதிமணி, "இந்திய ஜனநாயகத்தின்மீது நடத்தப்பட்ட மிகப்பெரும் தாக்குதல் மிசா! பின்னாளில், அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டார், அதைக் கொண்டுவந்த இந்திரா காந்தி. தன்னுடைய திரைப்படத்திற்காக அம்மையார் ஜெயலலிதாவின் காலில் விழுந்த இந்தத் தற்குறிக்கு, அதன் வலி தெரியாது!" என்று கூறுகிறார்.

எழுத்தாளர் அழகியபெரியவன், 'விஜய்யின் சட்டமன்றக் குரலுக்குப் பின்னால் பெரிய சதிக்கூட்டம் உள்ளது' என்கிறார். அவர் எழுதியுள்ள பதிவில், 'இந்தக் கத்தல் ஒற்றைக் குரல் அல்ல. இது கூட்டுச் சதிகளின் குரல். இதற்கு உள்ளே வெறுப்பு, வன்மம், குரூரம், தந்திரம், திசைதிருப்பல், அநாகரிகம், சாதியம், சனாதனம், சுயநலம் எல்லாமே பதுங்கி உள்ளன. அன்று வெளிப்பட்டது, ஆள்பவர்களின் துணிச்சல் அல்ல. குற்றம் சாட்டப்பட்டவர்களின் உறுதி. எப்போதுமே உறுதியான ஒன்றை தகர்த்திடத்தான் அதிகப்படியான ஆற்றலைச் செலவழிக்க வேண்டியிருக்கும். அதற்காகத்தான் இந்தக் கத்தல்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

"இதன் பிறகும் நீங்கள் நடிகர் ஆட்சியை ஆதரித்தால், நீங்கள் ஜனநாயக விரோதியாவீர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார், ஆவணப் பட இயக்குநர் பி.ஆர்.அமுதன்.

## ப்ளாஷ்பேக்

### 60-வது பிறந்தநாள் வாழ்த்து!



2017-ஆம் ஆண்டு, எனது 60-வது பிறந்த நாளன்று, அண்ணா அறிவாலயத்தில், அண்ணன் டி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெறலாம் என்று வந்தேன். அந்த நேரம், திடீரென்று நம்முடைய கழகத் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவாலயத்திற்கு வந்திருந்தார். உடனே, அண்ணன் பூச்சி முருகன் அவர்களிடம், இன்றைக்கு எனக்கு பிறந்தநாள், தலைவரிடம் வாழ்த்துப் பெற முடியுமா? என்று கேட்டேன். உடனே அவர் என்னை தலைவரிடம் அழைத்துச்சென்றார். தலைவர், கலைஞரின் புத்தகம் ஒன்றை எனக்கு அன்பளிப்பாக வழங்கியதுடன், 'எத்தனையாவது பிறந்தநாள்? என்று கேட்டு வாழ்த்தியதை என்னால் என்றும் மறக்க முடியாது.



கொள்ளுமேடு ராஜேந்திரன்

**– கொள்ளுமேடு ராஜேந்திரன், அமைப்பாளர், தி.மு.க. இலக்கிய அணி, வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### விளைவைக் குறித்து, அஞ்சப்போவதில்லை!

1962-ஆம் ஆண்டு, மாநிலங்களவையில் இந்தித் திணிப்பை எதிர்த்து, அண்ணாவின் போர்க்குரல் முழங்கியது. 'விளைவைக் குறித்து, அஞ்சப்போவதில்லை' என அவர் ஆற்றிய உரையில், "பலப்பல இன மக்களையும் மொழிவழி மக்களையும் கொண்டிருக்கின்ற நாடு இந்தியா. அதனால்தான், 'இந்தியா ஒரு துணைக்கண்டம்' என மிகப் பொருத்தமாகப் பெயரிடப்பட்டிருக்கிறது. பல இன மக்களைக் கொண்ட சமூக அமைப்பிலும், இணைப்புமுறை அரசியல் அமைப்பிலும், ஒரே ஒரு பொதுமொழி தேவை என வாதாடுவது, நமது சமூகத்தின் சில பகுதி மக்களுக்கு, எதிர்பாராத அநீதியையும், ஏற்படுத்திவிடும்" என்று குறிப்பிட்டிருப்பார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900